**கம்பஹா, அத்தனகல மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் -2015.**

கம்பஹா, அத்தனகல மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த, தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சால் திட்டத்தின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கம்பஹா, அத்தனகல, மினுவாங்கெடை பிரதேச செயலகங்களின் கீழ் வருகின்ற பகுதிகள் மற்றும், மீரிகம பிரதேச செயலகங்களின் கீழ் வருகின்ற பகுதிகளின் பல பிரிவுகளில் வசிப்போருக்கான பாதுகாப்பான மற்றும் போதுமான குடிதண்ணீரை வழங்குவதே திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 33,060 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 229.50 மில்லியனானதுடன் அதில் ரூபா 28,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 195.07 மில்லியன் சீனா அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்த அதேநேரம் மிகுதி தொகை ரூபா 4,960 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 34.43 மில்லியன் இலங்கை வங்கியால் நிதியளிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், அவற்றின் கடன் உடன்படிக்கைகள் மீளாய்வாண்டு இறுதி வரையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 இல் தொடங்கப்பட வேண்டுமெனவும் 2017 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதன் நடவடிக்கைகள் 2017 பெப்ரவரி 20 இலேயே தொடங்கப்பட்டிருந்ததுடன் 2020 பெப்ரவரி 19 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.3. கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) திட்டத்தின் செலவினங்களைக் காட்டுவதற்கு தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய பதிவேடுகள் பேணப்படுகின்றனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) திட்டத்தின் அமுல்படுத்தலிற்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய, திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுகளின் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் 2016 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 27 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் போது திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 26.89 மில்லியன் கூட்டுத்தொகையான இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு பெறுகைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 24.49 மில்லியன் நேரொத்த தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு திட்டத்தின் நிலையான சொத்துப் பதிவேடு முறையான வியில் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையின் 2.12 ஆம் பந்தியின் பிரகாரம், ஒப்பந்தகாரர் சொத்துக்களின் கணனிமயப்படுத்தப்பட்ட பேணுகை முறைமை மற்றும் கணனிமயப்படுத்தப்பட்ட பதிவேடொன்று வழங்குவதற்கு வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், திட்டத்தால் அத்தகைய முறைமை பின்பற்றப்பட்டிருக்காததுடன் பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு 2015 ஆம் ஆண்டிற்கான வரிசை அமைச்சின் பாதீட்டு மதிப்பீட்டில் உள்நாட்டு நிதியளிப்பு வளங்கள் ஊடாக ரூபா 24.50 மில்லியன் தொகையான ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட ஒதுக்கீடுகளில் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 19 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், பட்டியலிடப்பட்ட திட்டத்தின் காலப்பகுதிக்காக நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் சுட்டிக்காட்டப்பட்ட நிதி மற்றும் பௌதீக இலக்குகள் ஒட்டுமொத்த விரிவான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கும் அவற்றிற்கு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கும் அமலூக்கப்பட்டிருக்கவிவ்லை.

### 3.2. பௌதீக செயலாற்றல்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நிர்மாண நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு நிர்யணிக்கப்படாத அபிவிருத்தி பிரேரணைகள் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு ஒப்பந்தகாரருடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் 2013 மே 15 இல் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றின் மீதான நிதியளிப்பு ஒழுங்குகள் எதுவும் இன்மையால் மீளாய்வாண்டு இறுதிவரையும் நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டோ வினைத்திறனாக அமுலாக்கப்பட்டிருக்கவோ இருக்கவில்லை.

### 3.3. நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் 2017 திசெம்பர் 31 வரையிலும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.